திரு. ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியிலே கனவா மேட்டூர் என்கின்ற ஒரு சிறு நீர்த்தேக்கம் இருக்கிறது. எங்கள் பகுதியில் காவிரி போன்ற பெரிய ஆறு, பல்வேறு ஆறுகள் அங்கே ஓடுவதற்கு வாய்ப்பில்லை. எங்கள் பகுதி மேட்டுப் பகுதியாக இருப்பதாலும், இரண்டு மலைக்களுக்கிடையிலே அந்தப் பகுதி அமைந்திருப்பதாலும், அங்கே ஒரு சிறு நீர்த்தேக்கத்தைக் கட்டினால் அங்கேயுள்ள மேட்டுப் பகுதியில் வாழும் ஏழையெளிய விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

சேம்பளி, மோர்ஜனா என்று ஆறுகளின் மேல் ஒரு சிறு நீர்த் தேக்கம் கட்டித் தர வேண்டும் என்று அமைச்சரிடத்திலே நான் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறேன். இதே போன்று எங்கள் பகுதியில் உள்ள ஏரிகள் அத்தனையும் தூர்ந்துபோய் நிலமாக்கப் பட்டிருக்கின்றன. அதை தூர் எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சேதிக்கேரி, உம்மனாகுப்பம் போன்ற ஏரிகளில் எல்லாம் வீடுகள் கட்டப்பட்டு நிலமாக்கப்பட்டிருக்கின்றன. அதே போன்று ஆறுகள் எல்லாம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவற்றையெல்லாம் நீர்ப் பாசன மானியத்தின் மீது பேச வேண்டும். கேள்வியாகக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் நேராகவே சொல்லியிருக்கிறார்கள். அதன் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

கடனா நதி நீர்த்தேக்கத்திலிருந்து மாறன் குளத்திற்கு விடப்படும் தண்ணீர்.

79.—(* வினா எண் 9366) டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடனா நதி நீர்த்தேக்கத்திலிருந்து பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரத்தில் உள்ள மாறன் குளத்திற்கு விடப்படும் தண்ணீர் முழுமையும் சில தனியார்களுடைய உபயோகத்திலேயே இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பொதுமக்களுக்குப் பலன் ஏற்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

1987 மார்ச் 24]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கடனா நதி நீர்த்தேக்கத்திலிருந்து பாப்பாக்குடி ஒன்றியம் வடக்கு அரியநாயகிபுரத்தில் உள்ள மாறன்குளத்திற்கு விடப்படும் தண்ணீர் எந்த தனியார்கள் உபயோகத்திலும் இல்லை. இக்குளத்தில் பதிவு செய்யப்பட்ட பாசன பரப்பு 323.65 ஏக்கர். இந்த நிலங்களுக்கு முழு பாசனம் கொடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர தனியார் நிலங்களான 2.16 ஏக்கருக்கு தண்டத் தீர்வை மூலம் பாசனம் கிடைக்கிறது. இதனால் பதிவு செய்யப்பட்ட 323.65 ஏக்கருக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் உபயோகத்தில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் தண்டத் தீர்வை மூலம் தனியார் நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்கிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி தண்டத் தீர்வை மூலம் பாசனம் பெறும் தனியார்கள் அதிகமான தண்ணீரை பயன் படுத்திக் கொள்வதால் முறையாக அந்த தண்ணீர் யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இதற்காக நேரிடையாக பார்த்து ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்கும் நேரத்தில், தண்ணீர் முழுமையும் சில தனியார்களுடைய உபயோகத்தில் இருப்பதாக கோடிட்டுக் கேட்டிருக்கிறார்கள். தண்ணீர் முழுமையாக இல்லை. 323.65 எக்கர் பாசனம் போக கடைசிப் பகுதியில் உள்ள கடைமடைப் பகுதியில் உள்ள 2.16 ஏக்கருக்கு தண்டத் தீர்வை மூலம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதனால் ஏற்கெனவே இருக்கின்ற பாசனப் பரப்புக்கு பற்றாக்குறை ஏற்படும் என்றால் வருவாய்த் துறையிடம் கேட்டு அதன் மீது நடவடிக்கை எடுக்கப் படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கு அரியநாயகிபுரத்தில் உள்ள விவசாயி களுக்கு பெரிதும் பயன்படும் விதத்தில் கடனா நீர்த் தேக்கத்தில் புதிய கால்வாய் வெட்டும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் அரசின் குறிப்பிலே இல்லை.

கடலூர் தொகுதி திருவதி அணைக்கட்டு வாய்க்கால்

80—(*வினா எண் 10507) **திரு. வி. கோ. செல்லப்பா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதியான வெள்ளப்பாக்கம், மருதாடு, தோட்டப்பட்டு, நந்தப்பட்டு கிராமங்களுக்கு திருவதி அணைக் கட்டிலிருந்து வரவேண்டிய தண்ணீர் வாய்க்கால் தூர்ந்து உள்ளதால் பாசன வசதி பெற முடியவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நெல்லிக்குப்பத்திலிருந்து வெள்ளப்பாக்கம் ஏரி வரை வெள்ளப்பாக்கம் கால்வாயில் ஜூலை 1986-ல் தூர் அகற்றப் பட்டது. நந்தம்பட்டு, தோட்டப்பட்டு பகுதிகளில் தூர் அகற்றும் பணி நடப்பு நிதி ஆண்டிலேயே மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-50)

திரு. வி. கோ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தூர் வாரப் பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அந்தப் பகுதியில் தூர் வாரப்பட்டதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அந்த வாய்க்கால் பகுதியில் குடிசைகள் கட்டி, வாய்க்கால் தூர்ந்துபோய்